1973 டிசம்பர் 1]

நங்கனி ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை

*546 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரப்பலாறு திட்டத்தின்கீழ் நங்கனி ஆற்றில் பள்ளப்பட்டி அருகாமையில் தடுப்பு அணை (check-dam) ஒன்று கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, பரப்பலாறு திட்டத்தின்கீழ் ஏழெட்டு செக் டாம்கள் கட்டப்பட்டாலும், பள்ளப்பட்டிக்கு அருகில் கட்டப்படாமல் விடப்படுகிறது. அங்கு ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பழைய அணை ஒன்று இருந்து அது இப்பொழுது உடைந்திருக்கிறது. பழைய ஆயக் கட்டில் தண்ணீர் தேங்கியிருந்து பல இடங்கள் தூர்ந்திருக்கின்றன. ஆகவே, தயவுசெய்து பள்ளப்பட்டிக்கு அருகில் ஒரு செக் டாம் அமைப்பது குறித்து அரசு அருள்கூர்ந்து மறு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பள்ளப்பட்டி அணைக்குச் செல்லும் வாய்க்கால்கள் தூர்ந்திருக்கின்றன. நிலங்களில் மண் நிரம்பியிருந்தாலும்கூட எடுத்துவிடலாம். ஆனால், கட்டடங்கள்கூட அமைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. ஆகவே, மாற்று யோசனை சொல்லும்படியாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தலைமைப் பொறியாளர் கடிதம் எழுதியும் இதுவரை பதில் இல்லை என்ற அளவுக்குத் தகவல் இருக்கிறது. அது விவரம் எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைமைப் பொறியாளரோடு தொடர்பு கொண்டால் மாற்று யோசனைபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைமைச் செயலாளர் இடமிருந்து வந்த கடிதத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே தங்கள் பெயருக்கு மாற்றுத் திட்டம் ஒன்று அனுப்பியிருக்கிறேன். அது பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என்னிடமுள்ள தகவல் 29—5—1973 தேதி மாற்று யோசனை தருமாறு தலைமைச் செயலாளர் எழுதியதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு தகவல் இல்லை. உறுப்பினர் அவர்கள் அப்படி அவர்களுக்கு எழுதியிருந்தால் அது பரிசிலனையில் இருக்கும். அது முடிந்து அரசாங்கத்திற்கு வந்த பிறகு அரசாங்கம் பரிசீலித்து முடிவு எடுக்கும்.

நசுவினி ஆற்றின் குறுக்கே அணை

* 547 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டைக்கு அருகிலுள்ள நசுவினி ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்ட மதிப்பீட்டிற்கு அரசினரால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு தலைமைப் பொறியாளரால் தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்தபின் இத்திட்ட வேலைகள் துவங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நசுவினி ஆற்றுத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு போடப்பட்டுள்ளது ? அதனால் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி கிடைக்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இத் திட்டத்திற்கு 20 லட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 3,551 எக்கர் நிலப்பாப்பு பலன் அடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமராவதி ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள்

* 548 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், அமராவதி ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?